# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 05 MAY -2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# வழியருகே வாழ்ந்தவர்கள்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் ஆன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் நல்லவரும் வல்லவருமாயிருக்கிறார். கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற எல்லாக் கூட்டங்களிலும் கர்த்தருடைய கரம் கூட இருந்தது. குறிப்பாக மார்ச் 19-ஆம் தேதி வானத்தின் வாசலில் நடைபெற்ற சிறப்பு ஆசீர்வாதக் கூட்டத்தில் திரளான ஜனங்கள் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனர். சகோதரர். வின்சென்ட் செல்வக்குமார் மூலமாக கர்த்தர் இந்த கடைசி காலத்தில் ஜனங்களுடைய மந்த நிலையைப் பற்றிப்பேசி எச்சரித்து, ஜெபித்து ஜனங்களை கிறிஸ்துவுக்குள் நடத்தினார்கள். அதேபோல ஏப்ரல் 14-ஆம் தேதி வானத்தின் வாசலில் நடைபெற்ற விசேஷித்த கூட்டத்தையும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். சகோதரர். ஸ்டீபன் அவர்கள் சென்னையிலிருந்து வந்து கர்த்தருடைய செய்தியை வழங்கினார்கள். இறுதியாக எல்லாருக்கும் ஜெபித்து ஆசீர்வாதத்திற்குள் நடத்தினார்கள். மேலும் வெளியூர் கூட்டங்களிலும் ஏப்ரல் 2-ஆம் தேதி பி.கே.என் ஆடிட்டோரியத்தில் வைத்து நடைபெற்ற உபவாச ஜெபத்திலும், தம்பி ஆஸ்பார்ன் ஜெபத்துரை ஏற்பாடு செய்திருந்த ஏலிம் திருச்சபையின் சிலுவை தியானக் கூட்டத்திலும் கர்த்தர் மகிமையாக வழிநடத்தினார். தொடர்ந்து மே மாதத்திலும் பல கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது இக்கூட்டங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். அதேபோல நேரலையில் நாம் நடத்துகிற கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம், சுவிசேஷ ஒளி என்ற நிகழ்ச்சிகளும் மிகுந்த ஆசீர்வாதமாக ஒளிபரப்பாகிறது. அது இன்னும் அநேக ஜனங்களுக்கு சென்றடைய ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து நம்முடைய இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழை கலரில் அச்சடித்து பல தேவப்பிள்ளைகளுக்கு அனுப்புகிறோம். அதன் மூலமாக தேவ நாமம் மகிமைப்படவும், ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவும், எல்லாத் தேவைகளும் சந்திக்கப்படவும் கருத்தாய் ஜெபியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற நாட்களில் சுவிசேஷ பயிற்சிக்கான ஏற்பாடுகள் செய்து சுவிசேஷம் அறிவிக்க ஜனங்களை தயார் செய்ய இருக்கிறோம். அதற்கான எல்லா வசதி வாய்ப்புகளும் செய்து கொண்டிருக்கிறோம் அதற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும் தங்களுடைய உதாரத்துவமான காணிக்கையினாலும், ஜெபத்தினாலும் ஊழியத்தைத் தாங்க மறவாதிருங்கள். இயேசு கிறிஸ்துவினுடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



அன்புடன் உங்கள் சகோதரர்

(சகோ. L.வின்சென்ட்ராஜ்)


ஜெப உதவிக்கு
1800 309 9333
+91 944 28 00 447
+91 944 28 00 449
மின்னஞ்சல்
prayers@jesuslives.in




# வழியருகே வாழ்ந்தவர்கள்



(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நாம் இந்த உலகத்தில் இயேசுவுக்காக, கிறிஸ்துவுக்காக வாழ்கிற வாழ்க்கை விலையேறப்பெற்றது. தேவன் இந்த பூமியில் மேன்மையான வாழ்க்கைக்கும், உன்னதமான வாழ்க்கைக்கும் தான் நம்மை அழைத்திருக்கிறார். அப்படிப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டிய நாம் இன்றைக்கு எந்த ஒரு முன்னேற்றமும், வளர்ச்சியும் இல்லாமல் அப்படியே இருக்கிறோம். இன்றைக்குக் காரியம் நடந்தால் போதும், தேவைகள் சந்திக்கப்பட்டால் போதும் என்று ஓடிக்கொண்டிருக்கிறோம். தேவன் நம்மை அவரோடு வாழவும், அவருக்குப் பிள்ளைகளாய் இருக்கவும், லூக்கா 15:31-ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி மகனே நீ எப்போதும் என்னோடிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கும் என்ற வாழ்க்கைக்கு தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் அதை சுதந்தரித்து, அவர் ஏற்படுத்திய ஆசீர்வாதத்தை அனுபவிப்பதற்குப் பதிலாக இன்னும் பரதேசிகளும், பிச்சைக்காரர்களுமாய் இருந்து அவருடைய வாக்குத்தத்தங்களுக்கும், ஆசீர்வதங்களுக்கும் அந்நியராயிருந்து அதை அனுபவிக்க முடியாமல் வெறுமையோடும், வேதனையோடும் இருக்கிறோம். இப்படியாகத்தான் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமைத்தனமாய், வெறுமையாய் எவ்வளவு வேலை பார்த்தும் கூலி இல்லாமல், அடிமைத்தன வேதனையோடு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். காரணம் வழியருகே உள்ள மரம்போல போவார், வருவார் எல்லாரும் கல்லெறிந்து பாதிக்கப்பட்டு கனி கொடாத மரம்போல் இருந்தார்கள். இப்படி வழியருகே வாழ்ந்தவர்களை தோட்டத்தில் நாட்டவும், கொத்தி எருப்போடவும் ஆண்டவராகிய தேவன் அவர்களை நிலைநாட்டச் சித்தங்கொண்டார். இந்த வழியருகே உள்ள வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், அதற்கு முடிவு கட்டவும் தேவன் திருவுளம் கொண்டார். இதைத்தான் அப்போஸ்தலர் 3-ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம். 2 முதல் 7 வரையுள்ள வசனங்களில் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்து கொண்டு வந்து

தேவாலயத்திலே பிரவேசிக்கிற, வருவோர், போவோர் எல்லாரிடமும் பிச்சை கேட்கும்படி நாடோறும் அலங்கார வாசலண்டையில் வைத்தார்கள். அவனுடைய வேலை தேவாலயத்திற்குச் சென்று தேவனை ஆராதிப்பதோ அல்லது தொழுதுகொள்வதோ அல்ல வாசல் அருகில், வழியருகே உட்கார்ந்து பிச்சை எடுப்பதும், பிச்சை கேட்பதும், அதைக் கொண்டு போய் தன் வீட்டிலே கொடுத்தால் தான் அவனுக்கு சாப்பாடும், தண்ணீரும், தங்க இடமும் உண்டு. இல்லை என்றால் அவன் நிலை பரிதாபம், ஒன்றும் கிடைக்காது. இதற்காகவே அவனை கடைத்தெருவிலோ அல்லது ஜனங்கள் கூடுகிற திருவிழாவிலோ கொண்டுப்போய் வைக்காமல் ஆலயத்தில் வாசலண்டையில், வழியருகே வைத்து உள்ளே போகிறவர்கள் கொஞ்சம் இரக்கப்பட்டு உதவி செய்து ஆதரிப்பார்கள், அதை வைத்துப் பிழைத்துக் கொள்ளலாம் என்று தான் அங்கே கொண்டுப் போய் வைத்தார்கள். நடந்தது என்ன வழியருகே அமர்ந்து பிச்சை கேட்ட அவனைப் பேதுருவும், யோவானும் கண்டு அவனை உற்று நோக்கி இங்கே பார் வெள்ளியோ, பொன்னோ பணமோ, எங்களிடத்தில் இல்லை என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று சொல்லி வலது கையினால் அவனைப் படித்து தூக்கி

விட்டார்கள். ஏறக்குறைய 40 வயது நிரம்பிய அவனது 40 வருட வழியருகே அமர்ந்திருந்த வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்கள். அப் 4:22-ல் அற்புதமாய் சொஸ்தமாக்கப்பட்ட மனுஷனுக்கு வயது நாற்பது என்று வேதம் சொல்லுகிறது. நாற்பது வருஷம் பிச்சைவாழ்வுக்கு, வழியருகே வாழ்ந்த வாழ்க்கைக்கு, பிறர் உதவியை எதிர்பார்த்து, மற்றவர்களை சார்ந்தே வாழ்க்கை நடத்தின அவனுக்கு, வழியருகே வெயிலும், பனியும், குளிரும் நிறைந்த அந்த வாழ்க்கைக்கு, சில சமயங்களில் அவனை தூக்கி வந்தவர்கள் இறக்கி வைக்கும் போது எத்தனையோ முறை தவறுதலாய் கீழே சாய்த்து அதனால் பல பாதிப்புகள், காயங்கள் உண்டாயிருக்கலாம். அவன் நினைத்த நேரத்தில் வர முடியாமல், சில சமயம் ஆலய ஆராதனை எல்லாம் முடிந்து, எல்லாரும் போன பின்பு அவனை அங்கே உட்கார வைத்தால் என்ன வருமானம் கிடைக்கும் யார் பிச்சை போடுவார்கள். இப்படி பல சங்கடங்களை அனுபவித்திருப்பான். இப்படிப்பட்ட எல்லா வாழ்க்கைக்கும், நிலையற்ற வாழ்க்கைக்கும் தேவன் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். வழியருகே உள்ள அவனைத் தேவாலயத்திற்குள்ளே போகும்படியாகவும், தேவனைத் தொழுது கொள்ளும்படியாகவும், ஆராதிக்கும்படியாகவும், வெளியே இருந்த வாழ்க்கையை உள்ளே அதாவது கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார்கள். வேதம் சொல்லுகிறது ஆதி 24:31-ல் அப்பொழுது அவன் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும், நீர் வெளியே நிற்பானேன்? என்று ஈசாக்குக்கு பெண் பார்க்க ஆபிரகாம் எலியேசரை அனுப்பும் போது பெத்துவேல் சொன்னது போல, இதுவரை சப்பாணியாய், பிச்சைக்காரனாய், வழியருகே வாசலிலே வாழ்ந்தவனுக்கு இப்பொழுது ராஜ மேன்மையும், உயர்வும் ஒரே நாளில் வந்தது. இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று பேதுருவும், யோவானும் சொன்ன போது அவன் எழுந்து, துள்ளி குதித்து தேவனை மகிமைப்படுத்தி, தேவனைத் துதித்துக்கொண்டே அவர்களுடனே தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அப் 4:8-ல் அப்படிச் சொலலுகிறது. அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும் ஜனங்கள் எல்லாரும் கண்டு ஆச்சரியப்பட்டுத் தேவனை மகிமைப்படுத்தினார்கள். நாற்பது வருட பிச்சைக்கார வாழ்க்கைக்கு, வழியருகே வாசலில் காத்திருந்த வாழ்க்கைக்கு, ஒரே நாளில், ஒரே நிமிடத்தில் கனி கொடுக்கிற வாழ்க்கையாக, தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்பட்ட மரமாக மாறியது. சங் 92:13-ல் கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள், எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள். இதுவரை தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்படாமல் பரதேசியாய், திக்கற்றவனாய் இருந்த அவனை, வழியருகே வாழ்ந்த அவனை ஆலயத்திற்கு உள்ளே தேவமகிமையிலே, தேவபிரசன்னத்திலே கொண்டுபோய் சேர்த்தார்கள். இன்றைக்கு யார் யார் எல்லாம் இந்த செய்தியை வாசித்து தன் வாழ்க்கையைத் தேவனுக்கு அர்ப்பணித்து, இதுவரை வழியருகே, தேவாலயத்திற்கு வெளியே, தேவ பிரசன்னத்திற்கு வெளியே வாழ்ந்து, என் வாழ்க்கையை நானே வீணடித்து, பிச்சைக்காரனைப் போல தேவனுடைய ராஜ்யத்தில் அந்நியனைப் போல வாழ்ந்து கொண்டு வந்தேன், என்னை மன்னிக்க வேண்டும் தேவனே, எனக்கு இரங்கும் என்கிறார்களோ அத்தனை பேருக்கும் தேவன் இரக்கம் காட்ட, தயவு காட்ட இன்றைக்கும் இரக்கமுள்ளவராக இருக்கிறார். இயேசு சொன்னார் யோவான் 10:16-ல் இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல், வேறே ஆடுகளும் எனக்கு உண்டு, அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும், கூட்டிச்சேர்க்க வேண்டும். தேவாலயத்திற்கு வெளியே தேவனை விட்டு, அவருடைய பிரசன்னத்தை விட்டு எத்தனை பேர் வாழ்கிறார்களோ அத்தனை பேரும் உள்ளே வரவும், நிலைநாட்டப்படவும், அவர் அலைச்சலுக்கும், முற்றுப்புள்ளி வைக்கவும் தேவன் கிருபையுள்ளவராக இருக்கிறார். 2 சாமு 7:10-ல் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன் போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் நியாயதிபதிகளைக் கட்டளையிட்ட நாள் வரையில் நடந்ததுபோலும் நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன் என்றார். நட்டு வைத்தேன் இனி அவர்கள் அலையாமல், பிச்சை எடுக்காமல், பணப் பற்றாக்குறையோடு வாழாமல், வழியருகே உள்ளவர்களாய் ஜீவிக்காமல் அவர்களை என் தொழுவத்திற்குள் கொண்டு வருவேன், பலனற்ற வாழ்க்கைக்கு, கனியில்லாத வாழ்க்கைக்கு, பிச்சை எடுக்கிற வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பேன் என்றார். இனி தேவனுடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்களாக, கனி கொடுக்கிறவர்களாக மாற்றி, உலர்ந்து போன, பட்டுப் போன வாழ்க்கையை தேவன் சரி செய்வார். இனி வழியருகே இருந்து விசாரிப்பற்ற மரமாக இல்லாமல், தானியமும், திராட்சைரசமும், களஞ்சியமும் நிரம்பி இருக்கும்படி தேவன் செய்வார். போகட்டும் யார் யார் எப்படி எல்லாம்

வழியருகே இருந்து வாழ்ந்து, என்ன தோல்வி, வேதனை அனுபவித்தார்கள், தேவன் அவர்களை எப்படி மாற்றினார் என்பதைப் பார்க்கப் போகிறோம்.

## வழியருகே இருந்த அத்திமரம்

அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற்குப் போய் அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங்காணாமல் இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று மத் 21:19. இயேசுவின் ஊழிய நாட்களில் கிராமங்கள் தோறும், பட்டணங்கள்தோறும் அலைந்து, நடந்து, நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார். பிசாசின் வல்லமையில் அகப்பட்ட ஒவ்வொருவரையும் குணமாக்கி அற்புதங்களைச் செய்தார். இப்படிபட்ட வேளையில் அவருக்கு பசியுண்டாயிற்று, அப்பொழுது தான் அந்த அத்திமரத்தைப் பார்க்க நேர்ந்தது. அது பச்சையாகவும், பார்ப்பதற்கு கண்கொள்ளாத காட்சியாகவும் இருந்தது, நடந்தது என்ன தெரியுமா? மாற்கு 11:13-ல் அதில் ஏதாவது அகப்படுமா என்று பார்த்தார் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை, பசியைத் தீர்க்காத மரங்களும், தாகத்தைத் தனிக்காத நீறுற்றுகளுமாய் இருந்தது. வெளித் தோற்றத்திற்கு அழகாக, அருமையாக, பச்சையாக மற்றவர்கள் பார்வைக்கு உயிருள்ள மரமாகவோ, காஞ்ச மரமாகவோ, பட்ட மரமாகவோ காணப்படாமல் செழிப்பாய், உயர்வாய் காணப்பட்டது. தனக்கு தானே கனிக்கொடுக்கிறது போல, தன் பார்வைக்கு நல்ல மரமாக இருந்தது. ஓசியா: 10:1-ல் இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத் தானே கனிக்கொடுக்கிறது என்ற வார்த்தையின்படி தன் பார்வைக்கு நல்ல மரமாக கனிகொடுப்பதைப் போல் இருந்தாலும் மற்றவர்கள் பசியை போக்கவோ, மற்றவர்களுக்காக பரிதவிக்கவோ இல்லை. இயேசுவின் பசியைப் போக்காத, விருப்பத்தை, சித்தத்தை நிறைவேற்றாத அத்திமரமாயிருந்தது, அதனால் அது சபிக்கப்பட்டுப் போயிற்று. அது மட்டுமல்ல தேவன் அதை வைத்த இடத்தில் இல்லாமல், அது நகர்ந்து போய் தோட்டத்திற்குள் இல்லாமல், வழியருகே நின்று போவார், வருவார் எல்லாரும் தன்னைப் பார்க்கவும், தன்மேல் கல்லெறியவும், பிடுங்கவும், பறித்து கொள்கிற இடத்தில் இருந்தது. இன்றைக்கு வழியருகே உள்ள மரமும், வழியருகே விழுந்த விதையும் ஒரு நாளும் பலன் தராது ஏன் தெரியுமா? அதற்கு பாதுகாப்பு இல்லை, தண்ணீர் பாய்ச்ச முடியாது, கொத்தவோ, எருப் போடவோ முடியாது, பரிந்து பேசவோ, இன்னும் இந்த வருஷம் இருக்கட்டும் என்று சொல்லவோ முடியாத இடத்தில் இருந்தது. வேதம் சொல்லுகிறது எரேமியா 2:21-ல் நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன், நீ எனக்குக் காட்டுத் திராட்சச் செடியின் ஆகாதக் கொடிகளாய் மாறிப்போனது என்ன? என்றார். உயர்குல மக்களாக, பரிசுத்த ஜாதியாக, அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நம்மை அழைத்தார். ஆனால் ஆகாத காட்டுச்செடியாக கசப்பாகவும் மாறிவிட்டது. இதைப்பற்றி ஏசாயா 5:2-ல் அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக் கட்டி, அதிலே ஆலையை உண்டு பண்ணி அது நல்ல திராட்சப் பழங்களைத் தருமென்று காத்திருந்தார். அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது. அதாவது தேவனை ஏமாற்றி, அவர் விருப்பத்தை நிறைவேற்றாமல் போனதால் தேவன் துக்கமடைந்தார், அதைக் குறித்து வியாகுலப்பட்டார். ஏன்? நான் நாட்டின, வைத்த இடத்தை விட்டு போனது, ஏன்? என்னை விட்டு அகன்று, வழியருகே சென்றது அதை இதற்காகவா நாட்டினேன் என்றார். சங்கீதம்: 80:8,9-ல் நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக் கொடியை கொண்டு வந்தீர், ஜாதிகளைத் துரத்தி விட்டு அதை நாட்டினீர் அதற்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணினீர், அது வேரூன்றி தேசமெங்கும் பரவியது, படர்ந்தது. அப்படிப்பட்ட உயர்குலத் திராட்சை செடியாக இருக்கவும், கனி கொடுக்கவும், பசியை போக்கவும் உண்டாக்கப்பட்ட மரம் கனி கொடுக்காமல் போய்விட்டது. அது நகர்ந்து வழியருகே மிதிக்கப்படவும் மற்றவர்கள் பார்வையில் காணப்படவும் தன்னை மறைத்துக் கொள்ளாமல், தேவனுக்குள் ஒளித்துக் கொள்ளாமல் மறைந்து வாழாமல் தான் செய்கிறதை எல்லாம் மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டது. ஆண்டவராகிய தேவன்



ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்த போது தன்னுடைய இருப்பிடத்தில், தான் உலாவுகிற இடத்தில், ஏதேன் தோட்டத்தில் தான் அவர்களை வைத்தார், அதைக் காக்கவும், பண்படுத்தவும் அவர்களை ஏற்படுத்தினார் ஆதி 2:15-ல் அப்படி சொல்லுகிறது. ஆனால் அவர்களோ தேவன் வைத்த இடத்தில் இல்லாமல் தனக்குப் பிடித்தமான இடத்திற்கு நகர்ந்து, தேவனை விட்டுவிலகி நாடோடிகளாய், பரதேசிகளாய் வழியருகே நிற்கிற மரங்களாய் தோட்டத்திற்குள் உள்ளே இருந்த அவர்கள் வெளியே துரத்தப்பட்டு கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொண்டார்கள். வழக்கம் போல் பகலின் குளிர்ச்சியான நேரத்தில் ஆண்டவர் வந்து தோட்டத்தில் பார்த்தபோது அவர்கள் இருவரையும் காணவில்லை. ஆதாமே எங்கே இருக்கிறாய் ஏன்? என்னை விட்டு அகன்று, விலகிப் போனாய். நான் உன்னை உயர்குல செடியாக என்னுடைய பாதுகாப்பிற்குள் வேலியடைத்து அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி, சுத்தம் செய்து கொத்தி எருப்போட்டு, களையெடுத்து, கனி கொடுப்பாய் என்று மிகுந்த ஆவலோடு இருந்த எனக்கு இப்படி ஏமாற்றி துரோகம் செய்து விட்டாயே என்று அங்கலாய்த்தார். காரணம் அந்த அத்தி மரம் தோட்டத்திற்குள் இல்லை, தோட்டத்திற்கு வெளியே தண்ணீர் பாய்ச்ச முடியாத இடத்திலும், வழியருகே உள்ள மரமாக மாறிவிட்டது. வேலியை தகர்த்து பாதுகாப்பில்லாத இடத்திற்கு சென்றுவிட்டது. அதனால் அந்த மரத்தை பாதுகாக்கவோ, பரிந்துபேசவோ முடியவில்லை. இதைத் தான் லூக்கா: 13:7-9 வசனங்களில் பார்க்கிறோம். இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன் ஒன்றையும் காணவில்லை இதை வெட்டிப்போடு, இது நிலத்தை ஏன் கெடுக்கிறது என்றார். அதற்கு தோட்டக்காரன் ஐயா இந்த வருஷமும் இருக்கட்டும் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன் என்றார் ஏன் என்றால் அந்த அத்திமரம் தோட்டத்திற்குள் இரக்கத்தைப் பெறுகிற இடத்திற்குள், பரிந்துபேசி ஜெபிக்கிற இடத்திற்குள் இருந்தது. அதனால் அது தப்பி இந்த வருஷமும் இருக்கட்டும் என்று தண்ணீர் பாய்ச்சுகிற இடத்தில் கொத்தி எருப்போடுகிற இடத்தில் இருந்தது. அதனால் இன்னும் கனி தருவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. மறுபடியும் தேவனுக்குள் மறைக்கப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு சென்றது. அது சபிக்கப்படவோ, கெட்டுப்போவதற்கோ வாய்ப்பில்லாமல் இருந்தது. எபி 6:7 சொல்லுகிறது எப்படியெனில், தன் மேல் அடிக்கடிப் பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது: சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு என்று சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே நாம் எங்கே இருக்கிறோம்? கர்த்தருடைய தோட்டத்திலா அல்லது இடம் மாறி, பெயர்ந்து வழியருகே நின்று கொண்டிருக்கிறோமா?, நாம் தண்ணீர்களுள்ள இடத்தில் இருக்கிறோமா நம்மைச் சுற்றிலும் வேலியடைக்கப்பட்டிருக்கிறதா, கொத்தி எருப்போடுகிற இடத்தில் இருக்கிறோமா? அல்லது உணர்வு இல்லாத இடத்தில் இருக்கிறோமா? நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது, இதுவரை நாம் எப்படி இருந்தாலும் பரவாயில்லை இனி கனி கொடுக்கவும், பலன் கொடுக்கவும், தேவன் விரும்புகிறார். அவர் பசியைப் போக்கவும், தாகத்தை தனிக்கவும் விரும்புகிறார். மற்றவர்களுக்கு நீதிமானாக, நல்லவனாக, பட்டுப்போகாத இலை நிறைந்த மரமாக வாழ்ந்தது போதும் இனி கர்த்தருக்கு கனி கொடுக்கிறவர்களாக வாழ நம்மை அர்ப்பணிக்க வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்து வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்த பர்த்திமேயு என்ற மனிதனைப் போல் பிச்சைக்கார வாழ்க்கைக்கும், குருட்டு வாழ்க்கைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்து மாற்கு 10:46-52 முடிய உள்ள வாழ்க்கையைப் போல நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்து நம்முடைய எஜமானுக்கு கனி கொடுக்கிறவர்களாகவும், அவருக்கு பலனை கொடுக்கிறவர்களாகவும் வாழ நம்மை அர்ப்பணிப்போம். கிருபையானது நம் அனைவரோடும் இருப்பதாக.



இலவசம்! இலவசம்!
இப்பொழுது

இயேசுவை தினம் பார்க்கிறேன் E - Publication பத்திரிக்கையை நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் இணையதளம், ஊழிய வலைதள பககங்களிலும் மற்றும் உங்கள் What's app-ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்!. What's app-ல் பெற 944 28 00 449 என்ற எண்ணிற்கு "Send Magazine" என Type செய்தால் உடனடியாக உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும். இணையதளம் மற்றும் சமூக வலைதளங்களில் பெற
www.jesuslives.in/resources
Facebook, Youtube ,Instagram & jesuslives.in
பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.



# தேவன் எழுந்தருள்வார்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பான சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள். நம் வீட்டில் சின்னப்பிள்ளைகள் அதிகக் குறும்பு செய்து கொண்டிருக்கும் போது இருக்கும் இடத்தில் இருந்து பெரியவர்கள் சத்தம் போடாதே! குறும்பு செய்யாதே என்று அதட்டிக் கொண்டிருப்பார்கள், ஆனால் அங்கு எந்த மாற்றமும் இல்லாமல் அதே நிலை நீடித்தால் திடீரென்று இருக்கும் இடத்தை விட்டு எழுந்திருப்பார்கள், இதைப் பார்த்து சிறுவர்கள் அடி விழப் போகிறது என்று பயந்து, குறும்புத்தனம் செய்யாமல் அமைதியாகி விடுவார்கள் அல்லது அடிக்குத் தப்ப இடத்தை விட்டு ஓடிப்போவார்கள. அதேபோல் தான் தாவீது சங்கீதம் 68:1-ல் தேவன் எழுந்தருள்வார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்கள் என்று சொல்கிறதை நாம் பார்க்கிறோம். பக்தனாகிய மோசேயும் எண் 10:35-ல் தேவனுடைய வார்த்தைகள் வைக்கப்பட்ட பெட்டியானது புறப்படும்போது கர்த்தாவே! எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக, உம்மை பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக என்பான். அதைக்கேட்டு தேவன் எழுந்தருள்வார். அப்படியே சத்துருக்கள் சிதறுண்டு ஓடிப்போவார்கள். இதை வாசிக்கிற அன்பு சகோதரிகளே உங்கள் வாழ்விலும் தேவன் எழுந்தருள்வார். இதுவரை உங்களை முன்னேறவிடாமல் இடைமறித்து கொண்டிருந்த எல்லா சத்துருக்களும் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்கள், உங்களை பாழாக்கின அத்தனை சத்துருக்களும் அவருக்கு முன்பாக அழிந்து போவார்கள், எதற்காக தேவன் எழுந்தருள்வார், அதற்கு யார் யார் என்ன செய்தார்கள், நாமும் என்ன செய்ய வேண்டும் என்பதை வேதத்திலிருந்து தெரிந்து கொள்வோமா?

## ஏதற்காக எழுந்தருள்கிறார்

மோசே மரிக்கிறதற்கு முன்பு அவன் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்த போது உபா 33:2-ல் கர்த்தர் சீனாயிலிருந்து எழுந்தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார். பாரான் மலையிலிருந்து பிரகாசித்து பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார், அவர்களுக்காக அக்கினிமயமான பிரமாணம் அவருடைய வலதுகரத்திலிருந்து புறப்பட்டது என்று, அவர் சீனாய் மலையில் எழுந்தருளி தம் ஜனத்திற்காக அக்கினிமயமான பிரமாணத்தை அவருடைய வலது கரத்தினால் எழுதிக்கொடுத்தார். அது அவர் கரத்திலிருந்து புறப்பட்டது என்கிறார். இன்னும் இந்த பிரமாணத்தை ஜனங்களோடே சொல்கிறபோது பயங்கரமான இடி முழக்கங்களை மின்னல்களை, எக்காள சத்தத்தை, மலை புகைகிறதை கண்ட ஜனங்கள், பின்வாங்கி தூரத்தில் நின்று மோசேயை நோக்கி நீர் எங்களோடே பேசும் நாங்கள் கேட்போம் தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக பேசினால் நாங்கள் செத்துப் போவோம் என்றார்கள்.
யாத் 20:20-ல் மோசே ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள் உங்களை சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு தம்மை பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும் தேவன் எழுந்தருளினார் என்றார். தேவன் எழுந்தருளின போது அக்கினமயமான பிரமாணம் நமக்கு தரப்பட்டது. நாம் பாவம் செய்யாதபடி அவரைப் பற்றின பயம் நமக்கு உண்டாகிறது. இந்நாட்களிலும் இந்த பிரமாணத்தை தேவன் நமக்கு எழுதிக்கொடுத்திருக்கிறார். நாம் இதைக் காணும் போது எதை செய்யக்கூடாது எதைச் செய்ய வேண்டும் என்ற உணர்வு உண்டாகிறதல்லவா. ஆபிரகாம் வாழ்க்கையில் ஒரு குழப்பமான நிலை ஏற்பட்டது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈசாக்கு பிறப்பதற்கு முன்பு மனைவி

சாராளின் அனுமதியோடும், ஆலோசனையோடும் இஸ்மவேலைப் பெற்றான். வருஷங்கள் கடந்தது ஆண்டவர் சாராளை ஆசீர்வதித்து ஈசாக்கை கொடுப்பேன் என்றதும் இஸ்மவேலின் நிலை என்ன ஆகும் அவசரப்பட்டு விட்டேனே என்று கலங்கும் போது ஆண்டவர் அவனோடே பேசி இஸ்மவேலுக்காக நீ பண்ணின உன் விண்ணப்பத்தையும் கேட்டேன் அவனையும் ஆசீர்வதித்து பெரிய ஜாதியாக்குவேன். சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று ஆதி 17:22-ல் தேவன் ஆபிரகாமோடே பேசி முடித்த பின்பு அவர் அவனை விட்டு எழுந்தருளினார். இன்றைக்கும் நம்மோடு பேசும்படி தேவன் எழுந்தருள்கிறார். நாம் கடந்து வருகிற பாதை எவ்வளவு கடினமானதாய் இருந்தாலும், இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக என்று ஆபிரகாமின் கதறல் ஆண்டவர் செவிகளில் ஏறியது அல்லவா. அது போல தேவன் நம்மோடும் பேசி எந்த இக்கட்டிலும் நம்மையும் நடத்துவார். ஆதி 35:13-ல் கூட தேவன் யாக்கோபோடே பேசின ஸ்தலத்திலிருந்து அவனை விட்டு எழுந்தருளிப்போனார் என்று இருக்கிறது. இரவெல்லாம் ஆண்டவரோடு போராடி தான் யார் என்ற உண்மையை ஆண்டவரிடம் ஒத்துக்கொண்டு, யாக்கோபு இஸ்ரவேலாய் ஆசீர்வதிக்கப்பட்டான். 9ம் வசனம் தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி அவனை ஆசீர்வதித்து பலுகிப்பெருகி பற்பல ஜாதிகளும், இராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள், உனக்கு இந்த தேசத்தை கொடுப்பேன் என்று பேசி அவனை விட்டு எழுந்தருளி போனார். நம்மோடும் மறுபடியும் பேசுவார். நம் முற்பிதாக்களோடே பேசி அவர்களை வழி நடத்தின தேவன் நம்மோடும் பேச எழுந்தருள்கிறார். நம் மீது கண்ணை வைத்து ஆலோசனை சொல்லி நடத்துகிறார் அதற்காக எழுந்தருள்கிறார்.



## கர்த்தாவே எழுந்தருளும்

மோசே பிரமாணங்களைப் பெற்றான் என்றால் சாதாரணமாக அல்ல அவன் ஜெபிக்கிறவனாய் இருந்தான் யாத் 34:9-ல் ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருள வேண்டும். இந்த ஜனங்கள வணங்காக்கழுத்துள்ளவர்கள், நீரோ, எங்கள் அக்கிரமத்தையும், எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும் என்று ஜெபித்தான். தனக்காக மாத்திரம் அல்ல தன்னோடு கூட இருக்கும், தம் ஜனத்தின் பாவத்தை ஆண்டவர் மன்னித்து அவர்களையும் ஆண்டவர் தம் சுதந்தரமாக, பிள்ளையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மன்றாடினான். உபா 33:16-ல் யோசேப்பை ஆசீர்வதித்து முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேலும் தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின் மேலும் வருவதாக என்று கூறினான். கொலைகாரனாய் ஓடிப்போன தன்னை முட்செடியில் தோன்றி தயை செய்த தேவன் என்று நினைவு கூறுகிறான்.

சங் 9:19-ல் தாவீது எதிரிகள் போராட்டத்தின் நடுவில் எழுந்தருளும் கர்த்தாவே! மனுஷன் பெலன் கொள்ளாதபடி செய்யும் என்று ஜெபிக்கிறான். மனிதர்களை அல்ல நான் உம்மை நம்பியிருக்கிறேன். மனுஷன் பெலன் கொள்ளவிடாதேயும் என்கிறான் 2 நாளா 6:41-ல் சாலமோன் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை கட்டி விட்டு தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய தாபர ஸ்தலத்திற்கு தேவரீர் உமது வல்லமை விளங்கும் பெட்டியுடன் எழுந்தருளும் என்று தேவ ஆலயத்தில் அவர் பிரசன்னம் வரவேண்டும் என்று ஜெபிக்கிறான். சங்கீதம் 74:3-ல் ஆசாப் என்னும் சங்கீதக்காரன் நெடுங்காலமாக பாழாய்க்கிடக்கிற ஸ்தலங்களில் உம்முடைய பாதங்களை எழுந்தருளப்பண்ணும், பரிசுத்தஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப்போட்டான் என்று ஜெபிக்கிறான். சங்கீதம் 44:23,26-ல் தாவீது ஆண்டவரே, விழித்துக்கொள்ளும் ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எழுந்தருளும் எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும். எங்களுக்கு ஒத்தாசையாக எழுந்தருளும், உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும் என்று

தன்னுடைய இக்கட்டுகளை சொல்லி, இவைகளில் தேவன் எழுந்தருள ஜெபித்தான். சீஷர்கள் கூட படகில் பிரயாணமாய் போகையில் சுழல் காற்று வீசியதால் அவர்கள் மோசமடையத்தக்கதாய் படகு தண்ணீரினால் நிறைந்த போது லூக்கா 8:24-ல் இயேசுவிடம் வந்து ஐயரே! ஐயரே மடிந்து போகிறோம் என்று அவரை எழுப்பினார்கள், அவர் பிண்ணனியத்தில் உறங்கிக் கொண்டிருந்தார், அவர் எழுந்து காற்றையும், ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார். உடனே அவைகள் நின்று போய் அமைதலுண்டாயிற்று. அவர்கள் ஜெபங்களை எல்லாம் கேட்டு அவர்கள் இக்கட்டுகளை மாற்றி அமைதல் உண்டாக செய்த தேவன் உங்களுக்கும் இரங்கி, அது பரிசுத்தமாக்குதலோ, பாடுகளை மாற்றுவதோ, பாழாய் இருப்பதை சீர்படுத்துவதோ, தமது பிரசன்னத்தை ஆலயத்தில் இறங்கச் செய்வதோ, புயல் காற்றை ஓயப் பண்ணுவதோ எதுவானாலும் தேவன் எழுந்தருள்வார். கர்த்தாவே எழுந்தருளும் என்று ஜெபிக்கிற நம் வாழ்வில் அவர் எழுந்தருளி நன்மை செய்வார்.

## இப்பொழுது எழுந்தருளுவேன்

எழுந்தருளும் கர்த்தாவே! ஏவ்வளவு காலம் நான் இந்தப் பாதையில் போவேன், எப்போது எனக்கு இரங்கி நன்மை செய்யப் போகிறீர் என்று கலங்குகிற நம்மை பார்த்து தான் ஏசா 33:10-ல் இப்பொழுது எழுந்தருள்வேன், இப்பொழுது உயருவேன், இப்பொழுது மேன்மைப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். பார்வோனின் சேனை துரத்தி வரும் போது செங்கடல் முன்னால் செல்லும் போது வேறு வழியே இல்லை கர்த்தாவே என்று கூப்பிட்ட அல்லது பயத்தினால் செய்வதறியாது திகைத்த தம் ஜனத்துக்காக தேவன் இப்போது எழுந்தருளுவேன், உயருவேன், மேன்மைப்படுவேன் என்று செயல்படவில்லையா? உங்களது இந்த இக்கட்டிலும் அவர் எழுந்தருள்வார். பிரமிக்கத்தக்க அதியங்களை அவர் செய்வார் சங் 102:13-ல் தேவரீர் எழுந்தருளி, சீயோனுக்கு இரங்குவீர்,அதற்குத் தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது இதுவரை சத்துரு பலவிதங்களில் ஒடுக்கியிருக்கலாம், வீட்டின் மேல் தனித்திருக்கும் குருவியைப் போல நீங்கள் என்ன நடக்கப் போகிறதோ! எனக்கு யார் உண்டு நாதா! என்று கதறியிருக்கலாம். அந்த குரலைக் கேட்டு தேவன் எழுந்தருளி சீயோனாகிய நமக்குத் தயை செய்யப் போகிறார். அந்த காலமும், குறித்த நேரமும் வந்தது, இப்பொழுது எழுந்தருள்வேன் என்று நமக்காக எழுந்தருள்வார். ஒருவேளை ஆண்டவரை நாம் நம்பாமல், நினையாமல் மறந்து போய் இஷ்டம் போல் வாழ்ந்த வாழ்வின் நிமித்தம் இந்தப் பாடு வந்திருக்கிறதோ என்று நீங்கள் நினைக்கலாம். சங் 78-ல் நாம் வாசிக்கும் போது, இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்வு அப்படி இருந்ததின் நிமித்தம் ஆண்டவர் பல சிட்சைகள் வழியாய் நடத்தினார். ஆனால் சங் 78:65-ல் அப்பொழுது ஆண்டவர் நித்திரை தெளிந்தவர் போலவும் திராட்சரசத்தால் கெம்பீரிக்கிற பராக்கிரமசாலியைப் போலவும் விழித்து தம்முடைய சத்துருக்களைப் பின்புறமாக அடித்தார். நித்திரை தெளிந்தவர் போல இப்பொழுது எழுந்தருள்வேன் என்று எழும்புவார். நம்மை சத்துருவின் கையில் ஒப்புக்கொடாமல் காப்பாற்றுவார். அதற்குத்தான் தேவன் எழுந்தருள்கிறார். அவர் எழுந்தருளி நமக்கு தயை செய்யும் நேரத்தில், குறித்த காலத்தில் நாம் வந்திருக்கிறோம். தேவன் எழுந்தருளி நமக்கு இரங்குவார். தண்டனையும், அழிவும் நியமிக்கபட்டு விட்ட சூழ்நிலையில் எஸ்தர் ராஜ சமூகத்தில் தன் எதிராளியை பற்றி முறையிடும் போது ராஜா எழுந்தருளினது போல, துஷ்ட ஆமானை அழித்து, தம் ஜனத்தை கெம்பீரிக்கப் பண்ணினது போல தேவன் எழுந்தருளுவார். சத்துருக்களை சிதறடித்து ஜெயம் கொடுப்பார் எனவே மனம் கலங்காதிருங்கள், ஆண்டவரை பகைக்கிறவர்கள், நமக்கு விரோதமாய் எழும்பின சத்துருவை சிதறிப்போக பண்ணுவார் என் ஆண்டவர் தாமே இதை வாசிக்கிற ஒவ்வொருவர் வாழ்விலும் பெரியவராய் எழுந்தருளி ஜெயங்கொடுப்பாராக!



# சிலுவை தியானக் கூட்டங்கள்

## (சென்னை)










கடந்த ஏப்ரல் மாதம் 2,3 தேதிகளில் சென்னை ஏலிம் திருச்சபையில் வைத்து நடைபெற்ற சிலுவை தியானக் கூட்டங்கள் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்றது. 2-ஆம் தேதி பி கே என் ஆடிட்டோரியத்தில் வைத்து நடைபெற்ற உபவாச ஜெபத்திலும். மாலையில் நடைபெற்ற கூட்டங்களிலும் திரளான ஜனங்கள் வந்து கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற தேவன் கிருபை செய்தார். நமது சகோதரர். வின்சென்ட்ராஜ், சகோதரி. கலா வின்சென்ட்ராஜ் இருவரையும் இக்கூட்டங்களில் தேவன் வல்லமையாக பயன்படுத்தினார்.





# விசேஷித்த ஆசீர்வாத கூட்டம்

## (செம்பட்டி)









மேலும் ஏப்ரல் 14-ஆம் தேதி விசேஷித்த ஆசீர்வாதக் கூடுகை நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து ஆசீர்வாதமாக நடைபெற்றது. அந்த கூட்டத்தில் திரளான ஜனங்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றனர். சகோதரர். ஸ்டீபன் அவர்கள் தேவசெய்தியை கொடுத்து, ஜனங்களை ஆசீர்வதித்து ஜெபித்தார்கள். எல்லாக் கூட்டங்களையும் ஆசீர்வதித்து, ஜனங்களை வார்த்தையினாலும், சுகத்தினாலும் ஆசீர்வதித்த தேவனுக்கு மகிமை உண்டாவதாக.



உங்களுக்கான

# கர்த்தரின் திட்டம்

சகோதரி.பிரேமா டேவிட்

எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறை வேற்றுவார். யோபு 23:14

கிறிஸ்துவின் அன்பான வாலிபத்தம்பி தங்கைகளே, நாம் நினைக்கிறதற்கும், வேண்டிக் கொள்கிறதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்யும் வல்லவராகிய (எபே 3:20) நம் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கல்லூரியிலிருந்து போனதுக்கப்புறம் என்ன செய்யப்போகிறாய்? என்று ஐடாவிடம் தோழிகள் கேட்டபோது அவள் திரும்பத் திரும்ப சொன்ன பதில், அம்மா அப்பா மாதிரி இந்தியாவில் மிஷினெரியா ஊழியம் செய்யனும்னு ஆசை எனக்கில்லை. நிச்சயமாக அது நடக்காது. நெவர்.. நெவர்... நெவர்.. என்றாள்.தீடீரென்று அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்று தந்தி வந்த காரணத்தினால் அம்மாவுக்கு உதவி செய்வதற்காக இந்தியா வந்தாள். அம்மாவுக்கும், அப்பாவுக்கும் மிகுந்த உதவியாக இருந்தாள். ஒருநாள் உயர்குல பிராமணர் ஒருவர் கண்ணீரோடு ஓடோடி வந்தார். என் மனைவி 14 வயது தான், பிரசவ வலியில் தவிக்கிற அவளை காப்பாத்த மருத்துவச்சியால் முடியல, நீங்க அமெரிக்காவிலிருந்து வந்திருக்கீங்கன்னு கேள்விப்பட்டோம். எப்படியாவது நீங்க வந்து என் மனைவியைக் காப்பாத்துங்க அம்மா என்றார். சாரிங்க எங்க அப்பாதான் டாக்டர் நானில்லை. அதனால் அவர்தான் உதவி செய்யமுடியும் என்றாள். என்னது உங்க அப்பாவா? ஒரு ஆம்பளையான அவரை கூட்டிட்டு போகக்கூடாது அபிஷ்டம் அவ செத்தாலும் சாகறா என்று வேதனையோடு சென்றார். அதே நாளில் மேலும் இருவர் இதே மாதிரி வந்து திரும்பிச் சென்றனர். ஐடா அப்பாவிடம் என்ன டேடி இப்படி? ஏன்? என்றாள். இங்குள்ள சம்பிராதாயம், ஜாதி மத சட்டம் அந்த மாதிரி, அத மீறி யாரும் ஒன்னுஞ்செய்ய முடியாது. அதனால இதைமறந்துரு என்றார். எப்படி இத மறக்கமுடியும் என்றாள் ஐடா. பிரச்சனைக்கான தீர்வை உன்னால் கொடுக்க முடியலன்னா, நீ செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்ய முடியலைன்னா மறந்திட வேண்டியது தான். இதுதான் நான் இங்க வந்து கத்துக்கிட்ட பாடம் என்று அப்பா பொறுமையாகத் தன் அனுபவத்தைக் கூறினார். உன்னால் ஒன்னும் செய்ய முடியாதா? மனச்சாட்சி ஐடாவிடம் பேசினது. நோ நோ நோ.. என்னால் முடியாது என்றாள் ஐடா. ஐடா உனக்கு புரியலையா? ஆண்டவராகிய நான் தான் உன்னிடம் கேட்கிறேன். அந்த இரவு முழுவதும் ஆண்டவரின் அழைப்போடு, தனக்கென்று அவள் வகுத்திருந்த பாதையோடும் போராட்டம்தான். அடுத்த நாள் காலையில் எழுந்ததும் ஒரு பணியாளை அனுப்பி அந்த பெண்களின் நிலைமையை விசாரித்து வரச் சொன்னாள். அந்த மூன்று பெண்களும் மரித்துப் போன செய்தியைக் கேட்டு பல மணி நேரம் அழுதாள். அதன்பின் ஒரு தீர்மானத்தோடு அவள் அம்மா, அப்பாவின் அறைக்குச் சென்று நான் அமெரிக்கா சென்று டாக்டருக்குப் படிக்கப் போகிறேன். பின்பு இங்கு வந்து இங்குள்ள பெண்களுக்கு உதவி செய்யப் போகிறேன் என்றாள். அமெரிக்கா சென்றவள் டாக்டர் பட்டம் பெற்று, பணத்தையும் திரட்டிக் கொண்டு தன் தோழியுடன் வந்தாள். அவளது அயராத உழைப்பு தியாகம், கரிசனை, ஆண்டவர் மீது கொண்ட அன்பு இவற்றால் உருவானது தான் உலகின் தலைசிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான வேலூர் சி.எம்.சி மருத்துவமனை. டாக்டர்.ஐடா ஸ்கடரின் அயராதப் பணியை காந்தியடிகள் நேரில் பார்வையிட்டு பாராட்டியுள்ளார். இவர் நினைவாக இந்தியா தபால்தலை வெளியிட்டுள்ளது. ஐடாவுக்கு டாக்டராக விருப்பமுமில்லை, அவளின் பெற்றோர்

டாக்டராக கட்டாயப்படுத்தவோ, வழிகாட்டவோ மறந்துரு என்றார். எப்படி இத மறக்கமுடியும் என்றாள் ஐடா. பிரச்சனைக்கான தீர்வை உன்னால் கொடுக்க முடியலன்னா, நீ செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்ய முடியலைன்னா மறந்திட வேண்டியது தான். இதுதான் நான் இங்க வந்து கத்துக்கிட்ட பாடம் என்று அப்பா பொறுமையாகத் தன் அனுபவத்தைக் கூறினார். உன்னால் ஒன்னும் செய்ய முடியாதா? மனச்சாட்சி பேசினது. நோ நோ நோ.. என்னால் முடியாது என்றாள் ஐடா. ஐடா உனக்கு புரியலையா? ஆண்டவராகிய நான் தான் உன்னிடம் கேட்கிறேன். அந்த இரவு முழுவதும் ஆண்டவரின் அழைப்போடு, தனக்கென்று அவள் வகுத்திருந்த பாதையோடும் போராட்டம்தான். அடுத்த நாள் காலையில் எழுந்ததும் ஒரு பணியாளை அனுப்பி அந்த பெண்களின் நிலைமையை விசாரித்து வரச் சொன்னாள். அந்த மூன்று பெண்களும் மரித்துப் போன செய்தியைக் கேட்டு பல மணி நேரம் அழுதாள். அதன்பின் ஒரு தீர்மானத்தோடு அவள் அம்மா, அப்பாவின் அறைக்குச் சென்று நான் அமெரிக்கா சென்று டாக்டருக்குப் படிக்கப் போகிறேன். பின்பு இங்கு வந்து இங்குள்ள பெண்களுக்கு உதவி செய்யப் போகிறேன் என்றாள். அமெரிக்கா சென்றவள் டாக்டர் பட்டம் பெற்று, பணத்தையும் திரட்டிக் கொண்டு தன் தோழியுடன் வந்தாள். அவளது அயராத உழைப்பு தியாகம், கரிசனை, ஆண்டவர் மீது கொண்ட அன்பு இவற்றால் உருவானது தான் உலகின் தலைசிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான வேலூர் சி.எம்.சி மருத்துவமனை. டாக்டர்.ஐடா ஸ்கடரின் அயராதப் பணியை காந்தியடிகள் நேரில் பார்வையிட்டு பாராட்டியுள்ளார். இவர் நினைவாக இந்தியா தபால்தலை வெளியிட்டுள்ளது. ஐடாவுக்கு டாக்டராக விருப்பமுமில்லை, அவளின் பெற்றோர் டாக்டராக கட்டாயப்படுத்தவோ, வழிகாட்டவோ அரசனிடமிருந்து மீட்டு வரவும் அவரால் முடியாவில்லை. உன் குலத்தை, பூர்வத்தை மட்டும் அறிவிக்காதே என்று சொல்லியனுப்புகிறார். யூத குலம் என்று தெரிந்தால் அவளால் அரசியாக முடியாமல் போய் விடுமோ என்ற பயம் ஒரு புறம், இவளுக்கு அந்த ராஜமேன்மை கிடைத்தால் சிறுபான்மை ஜனமான நமக்குப் பாதுகாப்பு கிடைக்குமே என்ற ஆசை மறுபுறம். எனவேதான் மொர்தெகாய் அப்படி கூறினார். ஏகப்பட்ட போட்டிகளின் நடுவிலே எஸ்தரை அரசன் அரசியாகத் தெரிந்தெடுத்தான். இதற்கும் மேலாக தேவனின் திட்டமும் அதுவாகவே இருந்தது. யூதர்களைக் காப்பாற்றும் ஒரு பெரிய பொறுப்பை தேவன் அவளுக்குக் கொடுத்திருந்தார். எஸ்தரும் அதை நிறைவேற்றி தேவனை மகிமைப்படுத்தினாள்.


டாக்டர் ஐடா ஸ்கடர்

இதை வாசிக்கிற உங்கள் வாழ்க்கையும் ஆசீர்வதிக்கப்பட்டு உயர்த்தப்பட வேண்டுமா? தாவீதைப் போல ஆண்டவரை நம்பி, தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து கஷ்டங்கள், இடைஞ்சல்களை பொறுமையாய் கடந்து செல்லுங்கள். மொர்தெகாய் சொல் தட்டாத எஸ்தரைப் போல நீங்களும் ஆண்டவருடைய வார்த்தை, பெற்றோர், பெரியோரின் ஆலோசனைப்படி நடக்கும் போது அழகு, பணம் அல்ல, உங்கள் கீழ்ப்படிதலும், பரிசுத்தமும் அங்கீகரிக்கப்பட்டு உங்களுக்கு உயர்வைக் கொண்டுவரும். அநேக உயிர்களை காப்பாற்றும். ஒருவேளை உங்களுக்கு பணமோ, அழகோ, அறிவோ இல்லாமலிருக்கலாம். ஆனால் உங்கள் குடும்பத்துக்காக, சமுதாயத்துக்காக, ஆண்டவருக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருக்கிறதல்லவா?. பேதையை ஞானியாக்குகிற, தாழ்ந்தோரை உயர்த்துகிற ஆண்டவரை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்ளும்போது அவர் உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார். படிப்போ, வேலையோ, திருமணமோ எதிலும் அவரால், அவரால் மட்டுமே உங்களுக்கு உதவி செய்ய முடியும். சாத்தான் தேவதிட்டம் உங்களில் நிறை வேறக்கூடாது என்பதற்காக பல தடைகளை, இச்சைகளை, சோர்வுகளை கொண்டு வந்தாலும் ஒத்தாசை தரும் பர்வதமாகிய இயேசுவை நோக்கி நீங்கள் தொடர்ந்து பார்க்கும்போது நீங்கள் தோற்றுப் போவதில்லை நிச்சயம் வெற்றிப்பாதையில் செல்வீர்கள். எனவே நம்பிக்கையாயிருங்கள். "பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசா 55:9) என்று மனதார ஆசீர்வதித்து உயர்த்தும் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவாராக.

# இயேசப்பாவாலே கோல்டு மெடல்

சிறுவர் பகுதி

ஹலோ குட்டீஸ் நல்லா இருக்கீங்களா?

அம்மா.. அம்மா..ன்னு கூப்பிட்டுகிட்டே ஆட்டோவிலிருந்து இறங்கி ஓடிவந்தான் ஜேபஸ். அம்மா, இன்னைக்கு எங்க ஸ்கூல்ல நடந்த **chess** போட்டியில ராஜீ **silver medal** வாங்கினாம்மா, நாளைக்கு நான் தான் **Gold medal** வாங்குவேன்னு சொன்னாம்மா. நான் அதற்கு நீ இன்னைக்கு **Silver Medal** வாங்கிட்ட பரவாயில்லை ஆனா நாளைக்கு நான் தான் **Gold Medal** வாங்குவேன்னு சொன்னேம்மா அதற்கு அவன் **Silver Medal** வாங்கிறதற்கே உனக்கு அறிவு இல்லை, நாளைக்கு நீ எப்படி **Gold Medal** வாங்குவ பார்க்கலாம்னு சொன்னான். நான் அதற்கு, நீ இன்னைக்கு உன் அறிவால **Silver Medal** வாங்கியிக்க நாளைக்கு நான், எங்க இயேசப்பாவால இதோ, இந்தக் கையில **Gold Medal** வாங்குவேன்னு சொன்னேம்மா என்று பள்ளியில் நடந்தவற்றை மூச்சுவிடாமல் சொன்னான் ஜேபஸ். அதைக்கேட்ட அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம். **Very Good** ஆமா தம்பி நாளைக்கு நீ தான் **Gold Medal** வாங்கப்போற, நம்ம இயேசப்பா உனக்கு தரப்போறாங்க. சரி அந்த **Gold Medal** நீ வாங்கிட்டு வந்ததும் **Show Case**-ல எந்த இடத்துல வைக்கலாம் என்று அவனை உற்சாகப்படுத்தினார்கள் அவன் அம்மா. இதையெல்லாம் அவங்க வீட்டுக்கு வந்திருந்த அம்மாவுடைய தோழிகளும் ரொம்ப ஆச்சரியமாய் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவன் **Gold Medal** வாங்கனும்னு எல்லோரும் **Prayer**-ம் பண்ணினார்கள். மறுநாள் பள்ளியில் **chess competition final**-ல நம்ம ஜேபஸ் தான் **Gold Medal**. நேற்று மாதிரியே ஆட்டோவிலிருந்து இறங்கி வேகமாக ஓடிவந்தான் தங்க மெடலோடு. அம்மா, அம்மா கடைசியில யானையை ஞானமாய் நகர்த்தி வைக்கிறதின் மூலம் அவனை நான் ஜெயிச்சிட்டேன். இயேசப்பா தான் எனக்கு ஞானம் தந்தாங்க. இயேசப்பாவாலே நான் இந்தக் கையில இந்தக் **Gold Medal** வாங்கிட்டேன்ம்மா என்று சந்தோஷமாய் கூறினான். அம்மாவும் **Thank You Jesus** என்று சொல்லிக்கொண்டு மகனோடு சென்று அந்த மெடலை **Show Case**-ல் வைத்தார்கள். அவன் அம்மா அவர்களின் **Friends**-களுக்கும் **Phone** பண்ணி ஜேபஸ் **Gold Medal** வாங்கினதைச் சொன்னார்கள். 7ஆம் வகுப்பு படிக்கும் இந்த சின்னப் பையனுக்கு ஆண்டவர் மீது எவ்வளவு நம்பிக்கை என்று ஆச்சரியப்பட்டு அவனைப் பாராட்டினார்கள். என்ன குட்டீஸ், நீங்களும்கூட உங்கள் **Studies**-ல, **Sports**-ல கூட இயேசப்பா மேல நம்பிக்கை வைச்சு விசுவாசமா **1st Rank**, **1st Prize** எனக்குத்தான்னு சொல்லுங்க. அது அப்படியே நடக்கும்படி இயேசப்பா உதவிசெய்வாங்க.

ஜெபிப்போமா?

அன்புள்ள இயேசப்பா, உங்கமேல நம்பிக்கை வைச்சு விசுவாசமா பேச, அறிக்கை செய்ய உதவிசெய்யுங்க. எங்க அக்கா, அண்ணன், தம்பி, தங்கை, **Friends** எல்லாம் எல்லாவற்றிலும் **First**-ஆ, **Best**-ஆ வர உதவிசெய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்



மனப்பாட வசனம்

"நம்மடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்"

1 யோவான் 5:4

மே
**27,28,29**
(வெள்ளி, சனி, ஞாயிறு)

பாவூர்சத்திரத்தில்

# நற்செய்தி

## பெருவிழா

*Good News Festival*



**இடம்:** V. A. நகர்,
பாவூர்சத்திரம்

**நேரம்:** தினமும் மாலை
6.30 மணிக்கு

மேலும் தொடர்புக்கு
944 28 00 447
944 28 00 449



## வாசகர்கள் கவனத்திற்கு !

வாசகர்கள் வசிப்பதற்கு எளிதாக நமது இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழ் கலரில் அச்சஅடிக்கப்பட்டு வெளிவர தேவன் கிருபைசெய்தார். உங்கள் சந்தாவை இனி **G-PAY** மூலம் செலுத்தலாம் மற்றும் இந்த ஆண்டிற்கான உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள். **+91 944 3009 333**

# அற்புதங்களின் நாயகரை உயர்த்துவோம்



**சகோதரர். ஜேம்ஸ் விக்டர் சென்னை.**

கடந்த நாட்களில் நுரையிரலில் பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தேன் எனக்காக தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டபோது என்னுடைய பூரண சுகத்திற்காக ஜெபித்தீர்கள். தேவன் என்னைத் தொட்டார், எனக்கு பரிபூரண சுகத்தைத் தந்து ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிக்கு வர தேவன் கிருபை செய்தார். எனக்காக ஜெபித்த உங்களுக்கு நன்றி.

**சகோதரி. மேரி திருச்சி.**

கடந்த நாட்களில் நான் மிகவும் பெலவீனப்பட்டு, வீட்டு வேலைகளைக்கூட செய்ய முடியாமல் எப்பொழுதும் படுத்தே இருப்பேன். மிகுந்த மனசோர்வினாலும், இருதய பெலவீனத்தினாலும் மிகவும் கஷ்டப்பட்டேன். உதவி செய்ய யாருமில்லை, உற்றார், உறவினர்களும் வெறுத்தார்கள், என் குடும்பத்தை ஒதுக்கினார்கள். பொருளாதாரப் பிரச்சனை, மனமுடைந்து போன நிலையில் ஒவ்வொரு நாளும் வாழ்வின் கீதங்கள் (இயேசு வாழ்கிறார் ஊழியத்தின்) பாடலை காலையில் இருந்து இரவு வரை தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டே இருப்பேன். எனக்குள் விசுவாசமும், சுகமும, தேவ பெலனும் தேவ கிருபையால் வந்தது. சுக பெலத்தைத் தேவன் தந்தார். தற்போது என் வீட்டு வேலைகளை நானே செய்கிறேன். எந்த ஜனங்கள் என் குடும்பத்தை ஒதுக்கி எங்களை அற்பமாகப் பார்த்தார்களோ அவர்கள் முன்பாக தேவன் எங்களை வாழ வைத்திருக்கிறார். அவருக்கே கோடான கோடி நன்றி.

**சகோதரி. அம்பிகா கேரளா**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், கடந்த நாட்களில் என் அம்மா மிகவும் பெலவீனப்பட்டு மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களை பரிசோதித்து போது உடம்பில் இரத்தத்தின் அளவு மிகவும் குறைவாக உள்ளது. உடனே இரத்தம் ஏற்ற வேண்டும் இல்லாவிட்டால் உயிருக்கு ஆபத்து என்று சொல்லிவிட்டார்கள். எங்க அம்மாவின் இரத்தம் ஏ நெகட்டிவ் மருத்துவமனையில் எல்லாரும் இந்த வகை இரத்தம் கிடைப்பது மிகவும் கடினம் என்றார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றோம். நான் இயேசப்பாவிடம் ஜெபித்தேன். இயேசப்பா எங்க அம்மாவுக்கு தேவையான இரத்தம் உடனே கிடைக்க உதவி செய்யுங்க, நான் இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கையில் சாட்சி எழுதுகிறேன் என்று பொருத்தனை பண்ணி ஜெபித்தேன். தேவன் என் பொருத்தனையின் ஜெபத்திற்குப் பதில் கொடுத்தார். உடனே இரத்தம் கிடைக்கவும், அதை அவங்களுக்கு உடம்பில் ஏற்றவும், நல்ல சுகத்தோடும், பெலத்தோடும் வீடு திரும்பவும் தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

**சகோதரி. நிர்மலா ஊட்டி.**

நான் இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழில் வந்த தேவசெய்தியை வாசித்தேன். அதில் லோத்தைப் பற்றி எழுதப்பட்டிருந்தது. உலகத்தைக் தேடக்கூடாது, சிற்றின்பத்திற்காக வாழக் கூடாது, அப்படி இருந்தாதால் லோத்தின் மனைவி கூட காப்பாற்றப்பட முடியவில்லை என்று எழுதப்பட்டிருந்த வார்த்தைகள் என்னைத் தொட்டது, என்னோடு பேசினது. நான் இப்படி வாழக் கூடாது என்று தீர்மானம் எடுத்தேன். தேவனிடம் என்னை அர்ப்பணித்தேன். இனி இந்த பூமியில் நான் தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்




## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள உடன் ஊழியர்கள் "அவசர தேவை"

- Data Entry Operators
- Prayer Warriors
- Video Editors
- Social Media Developers
- Office Administrator
- Keyboardist
- Stenographers
- Motion Graphics Designers
- Office Assistants
- Drivers
- Cook
- Magazine Designer's

மதுரை, செம்பட்டி, சென்னை ஊழிய அலுவலகங்களில் ஊழிய வாஞ்சையுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும்

வாசகர்கள் கவனத்திற்கு!! கடைசி கால சுவிசேஷ பணியை மேற்கொள்வதற்கு உங்களுக்கு தெரிந்தவர்களை இப்பணிகளுக்கு பரிந்துரை செய்யுங்கள் மேலும் அலுவலக விவரங்களுக்கு மட்டும் +91 7825 04 7825

## மீடியா மற்றும் ஐடி துறையின் சிறப்பு பயிற்சி வகுப்புகள் (3 மாதங்கள் மட்டும்)

Training Institute

**மீடியா துறையில்**

Camera, Editing, Program Production, Direction, Out door production ,Photoshop, Graphics, Motion Graphics மற்றும் மீடியா துறை சார்ந்த நுணுக்கங்கள் கற்று தரப்படும்

**ஐடி துறையில்**

Website Development. Website management, Android and iOS development etc.

**கல்வி தகுதி:**

ஏதேனும் பட்டப்படிப்பு (அல்லது) +2 (படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறன் உள்ளவர்களுக்கு)

(உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்) பயிற்சி முடித்தபின் சான்றிதல் வழங்கப்படும்

ஊழிய வாஞ்சையுடன், பயிற்சியில சிறந்துவிளங்குவோர்க்கு நமது சென்னை மற்றும் மதுரை அலுவலகத்தில் உடனடி வேலை வாய்ப்பு வழங்கப்படும்.



ஆன்லைன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க
www.dprince.in/training

மேலும் விவரங்களுக்கு:
+91 7825 04 7825

# நடப்பு செய்திகள்



## **Solar Storm:** பூமியைத் தாக்க உள்ள சூரிய புயல்... பாதிக்கப்படுமா இன்டர்நெட் மற்றும் **GPS** சேவை?

***Solar Storm*** எனப்படும் சூரிய புயல் நேரடியாக பூமியின் வளிமண்டலத்தை ஓரிரு நாள்களுக்குள் தாக்க நேரிடும் என்று அமெரிக்காவின் நாசா ***(NASA)*** எச்சரித்துள்ளது. சூரியனின் மேற்பரப்பிலிருந்து மின்காந்த வெடிப்புகள் மற்றும் சக்திவாய்ந்த ஆற்றல்கள் வெளிப்படுவதால் இந்நிகழ்வு சூரியப்புயல் எனப்படுகிறது. குறிப்பாக பூமியில் இங்கிலாந்து பகுதி அருகே வலுவான சூரியப் புயல் மோதும் அபாயம் இருப்பதாக நாசா ***(NASA)*** எச்சரித்துள்ளது. இந்த நிகழ்வின் துல்லியமான நேரம் குறித்து சரியான தகவலில்லை. மேலும் சில பகுதிகளில் இந்தப் புயல் வலுப்பெறும்போது 'பிரகாசமான ஒளி' தென்படுமாம். சூரியப் புயலின் தாக்கம் மற்றும் பாதிப்புகள்: சூரியனின் ***coronal mass ejection*** மற்றும் ***solar flares*** போன்ற நிகழ்வுகளால் பூமியில் ஏற்படும் வளிமண்டல விளைவுகளால் இது போன்ற சூரியப்புயல் ஏற்படுகிறது. அதே போல, சூரிய காற்று ***(Solar Winds)*** பூமியின் காந்தப்புலம் அல்லது வளிமண்டலத்தில் நுழையும்போது அது வளிமண்டலத்தை வண்ணமயமாக ஒளிரச் செய்கிறது. இதையே ***aurora polaris*** என்கின்றனர். இந்நிகழ்வு வடக்கு அரைக்கோளத்தில் நிகழும் போது ***'Northern lights'*** என்றும் தெற்கு அரைக் கோளத்தில் நிகழும் போது ***'Southern lights'*** என்றும் அழைக்கப்படுகிறது. இதுவும் இந்தச் சூரிய புயலால் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்கிறார்கள். ஆனால், இதை வெகுசில இடங்களில் மட்டுமே காணமுடியும். இதனால், உலகில் பல இடங்களில் இன்டர்நெட் மற்றும் ***GPS*** சேவை பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக கணித்துள்ளனர் விஞ்ஞானிகள். புயலின் தாக்கத்தால் ***high frequency*** ரேடியோ அலைகள் மற்றும் அதன் இணைப்பு பாதிக்கப்படலாம். மின்சார கட்டுமானங்களையும் இந்தப் புயல் பாதிக்கக்கூடும்! இது முதல்முறை இல்லை. சமீபகாலங்களில் இது போன்ற நிகழ்வுகள் அடிக்கடி நடக்கின்றன. சமீபத்தில் 40 ஸ்டார்லிங்க் செயற்கைகோள்கள் இப்படி ஒரு புயலால் செயலிழந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME : JESUS LIVES TRUST | A/C NAME : L.VINCENT RAJ |
| BRANCH : KOCHADAI MADURAI | BRANCH : MADURAI |
| BANK NAME : UNION BANK OF INDIA | BANK NAME : AXIS BANK |
| A/C.NO : 493902010001022 | A/C.NO : 109010100247030 |
| IFSC CODE : UBIN0549398 | IFSC CODE : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**

WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S

மே
14
10am-2pm

Jesus Lives MINISTRIES

செம்பட்டியில்

# உபவாச ஜெபம்

இடம்: வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்



**தேவ செய்தியாளர்கள்**

**சகோ. L.வின்செென்டராஜ்**

**சகோதரி. கலா வின்செென்ட்ராஜ்.**

**SUBSCRIBE AND WATCH ON JESUS LIVES MINISTRIES**

TO

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.